செ.வெ.எண். 07/ஜனவரி                                                                                          தேதி : 06.01.2017

**<u>தருமபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பற்றாக்குறை வறட்சி நிலை கணக்கீடு குறித்த ஆய்வுக்கூட்டம் வேளாண்மை துறை, வருவாய்த்துறை ம‰று« புள்ளியியல் துறை ஆகிய துறைகளுடன் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் மற்றும் சுகாதாரம் குடும்ப நலத்துறை செயலாளர்/ தருமபுரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டாக்டர்.ஜெ. ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**





தருமபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பற்றாக்குறை வறட்சி நிலை கணக்கீடு குறித்த ஆய்வுக்கூட்டம் வேளாண்மை துறை, வருவாய்த்துறை ம‰று« புள்ளியியல் துறை ஆகிய துறைகளுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் 70% சாகுபடி மழைநீரை எதிர்பார்த்து மானாவாரியாகவும் மீதம் 30% கிணற்று நீர் பாசனத்தை வைத்தும் விவசாய சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2016-ம் ஆண்டு 853.1 மி.மீ. மழை பெய்ய வேண்டிய அளவில் 446.7 மி.மீ. (52%) அளவு மட்டுமே மழை பெய்துள்ளது. இதில் தென்மேற்கு பருவமழை 361 மி.மீ. அளவில் 262.4 மி.மீ. அளவு பெய்து 73% பதிவாகி இருந்தாலும், வடகிழக்கு பருவ மழையை பொருத்தவரை 316 மி.மீக்கு 91 மி.மீ மட்டும் பெய்ததால் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. இதனால் வறட்சி நிலவி வரக்கூடிய சூழ்நிலையில் துல்லியமாக வறட்சியின் தாக்கத்தினை கண்டறிய மாற்றியமைக்கப்பட்ட 2016 வறட்சி மேலாண்மை வழிகாட்டுதல் படி வறட்சி பாதிப்பை முழு அளவில் எடுத்துக் காட்டும் கள அளவிலான கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிப்படைந்துள்ள கிராமங்களில் புலன்களை முழுமையாக ஆய்வு செய்து பூமியின் உண்மைநிலை (Ground Truthing) அறியப்பட வேண்டும்.

இப்பணியினை செம்மைப்படுத்தவும் தரை நிலை துல்லிய தன்மையை கைபேசியில் புலன் செயலி மூலம், வயலின் புகைப்படத்தை வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுரை பெறப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் புள்ளியியல் அலுவலர்கள் இணைந்து பணியை துல்லியமாக செய்யவும், விவசாயிகளுக்கு புதிய பயிர்காப்பீடு திட்டமான பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா திட்ட வழிகாட்டுதல் பலன்களை பெற்றளிக்கவும். இப்பணியினை செம்மைப்படுத்தவும் மேற்பார்வை செய்து அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கவும் தமிழக அரசு தருமபுரி மாவட்டத்திற்கு மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் சுகாதாரத்துறை முதன்மை செயலர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தருமபுரி மாவட்டத்தில் உள்ள தருமபுரி மற்றும் அரூர் கோட்டங்களில் ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 05.01.2017 முதல் வேளாண்மைத்துறை, வருவாய்த் துறை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்கள் நமது மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமமாக சென்று ஆய்வு செய்து வருகின்றனர்.

அரசு உயர்மட்ட ஆய்வுக் குழுவில் இடம்பெற்றுப்பவர்களின் விவரம்:-

1. வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு. க.கு. சேனாபதி, 2. வேளாண்மை துணை இயக்குநர் திரு. பெ. பாஸ்கர், 3. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி. ஆர்.ஆர். சுசீலா, 4. மேலாண்மை இயக்குநர் கூட்டுறவு சர்க்கரை ஆலை திருமதி. துர்காமூர்த்தி, 5. கோட்டாட்சியர் தருமபுரி திரு. இராமமூர்த்தி, 6. தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. அண்ணாமலை மற்றும் வட்டாட்சியர்கள், வேளாண்மை உதவி இயக்குநர்கள் விவசாயிகள் உடனிருந்தனர்.

இவ்வாய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம். காளிதாசன், சிப்காட் மாவட்ட வருவாய் அலுவலர் திரு பஷீர், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, மாவட்ட வருவாய் தனி

அலுவலர் திருமதி. துர்க்காமூர்த்தி, வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு. சேனாபதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி ரா.ரா. சுசீலா, மேலாண்மை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) திரு. பாஸ்கர், தோட்டக்கலைத் துணை இயக்குநர் திரு. அண்ணாமலை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.